சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.71/2018</u>

17.04.2026

வா.சா.1 திரு. சுந்தரமூர்த்தி, த/பெ. வீரையா (எ) வீரையன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் நான்தான் விவரம் சொன்னேன். தாவா சொத்தில் எனக்குண்டான பங்கை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களுக்குண்டான பத்திரங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பத்திரங்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருககு எப்படி கிடைத்தது என்றால் அவர் சம்பாதித்து வாங்கினார். பிராதில் தாவா சொத்துக்கள் எனது தகப்பனாரின் சுயசொத்துக்கள் என்று சொல்லவில்லை என்றாலும் பூர்வீக சொத்துக்கள் என சொல்லியுள்ளேன் என்றாலும் வீடும், 150 குழி நிலமும் எனது தகபப்னாரின் பூர்வீக சொத்து மற்ற சொத்துக்கள் என் தகப்பனாரின் சுயசம்பாத்திய சொத்துக்களாகும். தாவா 5 அயிட்ட சொத்துக்களில் எந்த எந்த சொத்து பூர்வீக சொத்து எந்த சொத்து சுய சொத்து என சொல்லவில்லை என்றால் பொதுவாக பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளேன். எனது தகப்பனார் தங்கவேலிடமிருந்து ஒரு சொத்தையும் ரெத்தினவேலிடமிருந்து ஒரு சொத்தையும் கிரயம் பெற்றுள்ளார். எனது தகப்பனார் கிரயம் வாங்கியது பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பெயரில் சிட்டா எப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகள் எனது சகோதரிகள் என்றால் சரிதான். அவர்கள் தஞ்சாவூரில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுடன் நான் நல்ல உறவுமுறையில் இருக்கிறேன் என்றால் இல்லை. நான் நல்ல உறவு முறையில்தான்இருக்கிறேன் என்றாலம் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தஞ்சாவூரில் நான் குடியிருக்கும் வீடு எனதுதகப்பனார் காலி மனையாக வாங்கி வீடு கட்டி கொடுத்தது என்றால் சரியல்ல. நான் சுயமாக வாங்கியதாகும். தாவா சொத்துக்கு எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு 30 வருடங்களாக வரவில்லை என்றால் இருக்கலாம். அவ்வப்போது விசேஷத்திற்கு வந்து செல்வேன். 1 ஆம் பிரதிவாதி ஜெயலெட்சுமி எனது தம்பி மனைவி என்றால் சரிதான். எனது தம்பி இருக்கும் போது என் வீட்டிற்கு வந்துபோவது வழக்கம் என்றால் சரிதான். எனது தம்பி ஜெயராமன் எப்போது எங்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. சுமார் எவ்வளவு வருடங்களுக்கு முன்பு என் தம்பி என் வீட்டிற்கு வந்து போனார் என்றால்

தெரியவில்லை. எனது தம்பி இறக்கவில்லை என்றால் தெரியவில்லை. கடைசியாக எனது தம்பி என் வீட்டிற்கு வந்தார் என்றாலும் நான்தான் அவரை வெளியூருக்கு அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. எனது தம்பி எங்கு உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தெரிந்துக்கொண்டே தற்போது வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தம்பி 10 வருடங்களுக்கு முன்பு எங்கோ சென்றுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் அவர் பெயரில் இருந்த சில சொத்துக்களை எனது சகோதரி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது தாயார் பெயரில் உள்ள சொத்துக்களை எனது சகோதரிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதிக்கும் அவரின் கணவருக்கும் சொத்துக்கள் கிடைக்கக்கூடாது என்பதற்காக நான் எனது தகப்பனார் மற்றும் தாயார் மூலமாக மோசடியான ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் எனது தகப்பனார் பெயரில் என்ன என்ன சொத்துக்கள் உள்ளது என சொன்னதன் அடிப்படையில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் குறித்து ஏற்கனவே பஞ்சாயத்து பேசப்பட்டு யார் யாருக்கு என்ன சொத்து என்று பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரித்த சொத்துக்கள் தான் 1 ஆம் பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பூர்வீகமாக கிடைத்த சொத்துக்களில் சிலவற்றை விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரம் தெரியுமா என்றால் தெரியாது. விவரங்கள் தெரிந்துதான் முதல்விசாரணை வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரை சங்கதிகளை ஒப்புக்கொண்டால் என் வழக்கிற்கு பாகம் கிடைக்காது என்பதால் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம்பிரித்ததை மறைத்து 2, 3 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2015 ஆம் வருடம் 1 ஆம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு சென்று தகராறு செய்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்து கண்டித்து அனுப்பினார்கள் என்றால் பிரதிவாதியை தான் கண்டித்து அனுப்பினார்கள் நான்தான் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும் 1 ஆம் பிரதிவாதி தான் புகார் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. 2015 ஆம் வருடம் நான் 2,3 பிரதிவாதிகளும் சேர்ந்து 1 ஆம் பிரதிவாதி வீட்டில் தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. நான் 10 ஆம் வகுப்பு படித்துள்ளேன். வழக்குரையில் பஞ்சாயத்து பேசப்பட்டதையும், பாகம் பிரிக்கப்பட்டதையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிராதை படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். தாவா சொத்துக்கள் 1ஆம்

பிரதிவாதியின் அனுபவத்தில்தான் உள்ளது. கணேசன் என்பவருக்கு சொத்தை விற்பனை செய்தேன் என்றால் இல்லை, விவசாயம் தான் செய்ய சொன்னேன். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை அவர் விற்பனை செய்துவிட்டதால் 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்குபாகத்தில் கிடைத்த சொத்தை விற்பனை செய்துவிட்டு 1 ஆம்பிரதிவாதிக்கு பாகம் கிடைத்த சொத்தை பொறுத்து வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர் பெயரில் உள்ள சொத்துக்கள்அனைத்தையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்ய வழக்கு பிழையுடையது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நான் எப்போதும் அனுபவித்ததில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டுஅனுபவத்தில் இல்லாத நிலையில் தவறாக நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. குறைவாக நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளதாலும் வழக்கு நிலைக்கத்தக்கல்ல என்றாலும் சரியல்ல. நீதிமன்ற கட்டணம் கட்டுவதை தவிர்ப்பதற்காக கூட்டு அனுபவத்தில் உள்ளதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 2, 3 அயிட்ட சொத்துக்களை நான் கணேசனிடம் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கை வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளதால் தாவாபடி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்தால்உண்மை தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா படி எனக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.